
கடவுளறிவு



திருவண்ணாமலை, ஸ்ரீ ரமண மகரிஷிகள்

கடவுளறிவு

இஃது

திருவண்ணுமலை

ஸ்ரீரமண பக்தர்களி லொருவரான

S. நாராயண ரெட்டியாரால்

எழுதப்பெற்று

சிதம்பரம் தாலூக்கா பூலாமேடு கிராமவாசிகளான

கோவிந்தசாமி பிள்ளை

சாமி பிள்ளை

அவர்களால்

வெளியிடப்பட்டது.

காபிரைட் ரிஜிஸ்டர்ட்] **1929** [விலை அணு 4

MADRAS

TIRUPATI SRI MAHANT'S PRESS

PRINTERS

முகவுரை.

கடவுளறிவு என்கிற இச்சிறு புஸ்தகத்திலிருக்கப்பட்ட கேள்விகளும், இக்கேள்விகளுக்குரிய சமாதானங்களும் மோக்ஷ மார்க்கங்களில் நடக்கும் ஸ்திரீ புருஷர்களுடைய உள்ளங்களில் உதிக்கக்கூடிய சந்தேகங்களைப் போக்கி, கலைமகளையும் தைரிய லக்ஷ்மியையும் துணைவர்களாகக் கூட்டி அவர்கள் ஆத்ம பரமாத்ம தரிசனம் பெற்று ஜீவன் முக்தர்களாகும் வரையில் பேருபகாரம் செய்யத் தகுந்தவைகளாயிருக்குமென்று நினைக்கிறேன்.

முன்னம் அடியேன் அச்சிட்ட ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவர், திருவண்ணுமலை ஸ்ரீ ரமண மகரிஷிகளுடைய சரித்திரோபதேசக் கிரந்தங்களையும், ஆன்மதரிசனம், ஸ்ரீ பகவத் கீதார்த்த பாலபோதினி, என்கிற நூல்களையும் பிரியமுடன் பெற்று வாசித்தத் தமிழ் நாட்டன்பர்கள் கடவுளறிவு என்கிற இப்புத்தகத்தையும் வாங்கி வாசிப்பார்களாக.

அடியார்க்கடியேன்,

S. நாராயண ரெட்டி,

திருவண்ணுமலை.

கடவுள் வணக்கம்

சந்ததமு மெனதுசெய லினதுசெய லியானெனுந் தன்மை நினையன்றி யில்லாத் தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த சமரச சுபாவ மிதுவே, யிந்தநிலை தெளியநா னெக் குருகி வாடிய வியற்கை திருவுள மறியுமே யின்னிலையிலே சற்றிருக்க வென்றான் மடமை யிதசத்ரு வாக வந்து, சிந்தை குடி கொள்ளுதே மலமாயை கன்மந் திரும்புமோ தொடு வழக்காய்ச் சென்மம் வருமோவெனவும் யோசிக்குதே மனது சிரத்தையெனும் வாளு முதவிப், பந்தமற மெய்ஞ்ஞான தீரமுந் தந்தெனைப் பாதுகாத் தருள் செய்குவாய் பார்க்கு மிடமெங்கு மொரு நீக்கமற நிறைநின்ற பரிபூர ணானந்தமே.

குரு வணக்கம்

காணரிய வல்லவெல்லாந் தானே கட்டுக் கட்டாக விளையு மதைக் கட்டோடே தான், வீணினிற் கர்ப்பூர மலைபடு தீப்பட்ட விந்தையெனக் காணவொரு விவேகங் காட்ட, வூணுறக்க மின்ப துன்பம் பேருராதி யொவ்விடவு மெனைப் போல வுருவங் காட்டிக், கோணறவோர் மான்காட்டி மானை யீர்க்குங் கொள்கை யெனவருட் குருவாம் ரமணத்தேவே.

ஓம் ஸ்ரீரமண சத்குரு பரமாத்மனே நம:

கடவுளறிவு

சிஷ்யன் :—ஓ குருநாதா! கடவுளுடைய சொரூப குண நடத்தைகளைப் பற்றிய சமாசாரங்களை அடியேன் தங்களுடைய திருவாக்கால் தெரிந்துகொள்ள விருப்பமுடையவனு யிருக்கிறேன்.

குரு :—குழந்தாய்! கடவுளைப் பார்த்த மகான்கள் அவருடைய சொரூப குண நடத்தைகளை மனித வாக்கால் சொல்லி முடியாதென்கிற காரணத்தால் பேசா மௌனிகளாய் விடுகிருர்கள். அவரைப்பற்றி மனித வாக்கால் சொல்லப்படுவதெல்லாம் அரைகுறையாகவே யிருக்கும்.

சிஷ்யன் :—ஓ குருநாதா! தாங்கள் எனக்குச் சொல்லப் போவதெல்லாம் தங்களுக்கு அரைகுறையாகக் காணப்படினும் எனக்குத் தங்களிடமிருக்கும் பக்தியால் அவை அனைத்தும் பூரணமானவைகளே. தாங்கள் அறிந்தவரையில் நான் தெரிந்துகொண்டால் எனக்குப் போதுமானது.

குரு :—குழந்தாய்! கடவுள் எல்லாம் செய்யவல்ல சித்தன்.

சிஷ்யன் :—ஓ குருநாதா! இதன் பொருள் எனக்கு விளங்கவில்லை.

குரு :—குழந்தாய்! சிருஷ்டி திதி சங்காராதித் தொழில்களை ஒழுங்குடனும் கணக்குடனும் எங்கும் எக்காலத்திலும் நடத்தும் பரிபூரண அறிவாளி கடவுள்.

சிஷ்யன் :—ஓ குருநாதா! சிருஷ்டி திதி சங்காரங்கள் என்பன யாவை?

குரு :—குழந்தாய்! இப்பூமியையும் இதற்கு வெளிச்சத்தை உதவும் சூரிய சந்திர நக்ஷத்திரங்களையும் இவைகளைப் போன்ற அநேக மனேக பூமண்டலங்களையும் சூரிய சந்திர நக்ஷத்திர மண்டலங்களையும் உற்பத்தி செய்யும் கடவுளின் செயலுக்கு சிருஷ்டி என்றும், உண்டாக்கப் பட்டவை அனைத்தையும் பாதுகாக்கும் கடவுளின் செயலுக்கு திதி என்றும், உண்டாக்கப்பட்டவை அனைத்தையும் இல்லாமற் செய்யும் கடவுளின் செயலுக்குச் சங்காரம் என்றும் சொல்லப்படும்.

சிருஷ்டித் தொழிலை முன்னிட்டுக் கடவுளைப் பிரம்மாவென்றும், திதித் தொழிலை முன்னிட்டுக் கடவுளை விஷ்ணுவென்றும், சங்காரத் தொழிலை முன்னிட்டுக் கடவுளைச் சங்கரரென்றும் சொல்லுகிறார்கள்.

சிஷ்யன் :—ஓ குருநாதா! பரிபூரண அறிவாளி என்று சொல்லப்படுகிற கடவுளுடைய சிருஷ்டித் தொழிலில் கணக்கற்ற பேதங்க ளிருப்பானேன்?

குரு :—குழந்தாய்! பேதங்களில்லா விட்டால் சிருஷ்டி என்கிற பேச்சே இல்லை. சிருஷ்டித்த பேத உருவங்களை நிலைபெறச் செய்யாவிட்டால் திதி என்பதே இல்லை. எல்லாம் ஒன்றாயிருக்கும் காலம்தான் சங்கார காலமென்று சொல்லப்படுவது.

பூமிகள் அநேகம். ஒன்று சிறியதா யிருக்கும். ஒன்று பெரியதா யிருக்கும். சூரியன்கள் அநேகம். ஒன்று பெரியதாயிருக்கும். ஒன்று சிறியதா யிருக்கும். சந்தி

ரர்கள் அநேகம். ஒன்று மற்றொன்றைவிடப் பெரியதாகவோ சிறியதாகவோ இருக்கலாம். நக்ஷத்திரங்களனேகம். ஒன்றைவிட மற்றொன்று சிறியதாகவோ பெரியதாகவோ இருக்கலாம். நீர் நிலைகள் அநேகம். ஒன்று கடலென்றும் மற்றொன்று சமுத்திரமென்றும், ஒன்று ஆறு என்றும் மற்றொன்று ஓடை என்றும், ஒன்று குளமென்றும் மற்றொன்று குட்டை என்றும் பெயர் பெறுகிறது.

புஷ்பங்கள் அநேகம். ஒன்று பெரியதாகவும் மற்றொன்று சிறியதாகவும் இருப்பதோடு ஒன்றற்கொன்று நிறத்தாலும், வாசனையாலும் பேதப்படுகின்றன. இவ்வாறே புல் பூண்டு செடி கொடி மரங்களிலும் காய் கனிகளிலும் ஜல சரங்களிலும் புழு பூச்சி பறவைகளிலும் விலங்குகளிலும் மனிதர்களிலும் உருவபேதம் நிறபேதம் குணபேதங்கள் கோடானு கோடி. இவ்வித அமைப்பே சிருஷ்டி. இவை அனைத்தும் இல்லாத இருப்பே சங்காரம்.

சிஷ்யன் :—ஓ குருநாதா! என் அறிவு இவ்வளவு அகண்ட அளவை அடைந்து கேட்ட கேள்வி அல்ல. என்னைப் போன்ற மனிதர்களில் சிலர் பரம ஏழைகளாகவும், சிலர் தனவந்தர்களாகவும், சிலர் நோயாளிகளாகவும், சிலர் சுகதேகிகளாகவும், சிலர் அங்கவீனர்களாகவும், சிலர் அழகிய மேனியுடையவர்களாகவும், சிலர் நல்லவர்களாகவும், சிலர் கெட்டவர்களாகவும், சிலர் தருமகுணமுள்ளவர்களாகவும், சிலர் லோபகுண முடையவர்களாகவும், சிலர் திருடர்களாகவும், சிலர் நீதிமான்களாகவும், சிலர் அறிவாளிகளாகவும், சிலர் மூடர்களாகவும் பரிபூரண அறிவாளியாகிய கடவுளால் சிருஷ்டிக்கப்படுவதேன் என்கிற சந்தேகத்தால் கேட்ட கேள்வி.

குரு :—குழந்தாய்! இது மிகவும் அற்பமான கேள்வி. கடவுள் பரிபூரண அறிவாளியும் சர்வ வல்லமையுமுள்ள சித்தனே. அவருடைய தொழிலில் குற்றம் குறைவுகளைக் கண்டு பிடிக்க நியாயமில்லை.

இப்பூமி, நிலமும் நீரும் கலந்த மிகப் பெரியதோர் மண்ணுருண்டை. இது ஆகாயத்தில் மிதக்கிறதென்பது மட்டுமல்ல; பம்பரம்போலச் சுழல்கின்றது; சூரியனைச் சுற்றியும் பிரதட்சணம் செய்கிறது. இச்செயல் காலமெல்லாம் நடக்கிறது. அதன் வேகம் எக்காலத்திலும் குறைவுபட்டதாகத் தெரியவில்லை. பூமி ஆகாயத்தில் மிதந் தோடுவதால் பூமியிலுள்ள நீர் கொட்டுண்டு விடுவதுமில்லை. பூமியின்மேல் இருக்கப்பட்ட நாம் தலைகீழாக விழுவதுமில்லை.

நீ எவ்விடத்தில், யாரிடத்தில் குற்றம் குறைவுகளைப் பார்ப்பாயோ அவ்விடத்தில், அவரிடத்தில் தீர விசாரித்தால் அவ்விடத்தில், அவரிலேயே குற்றம் குறைவுகளுக்கான காரணங்களைக் கண்டு கொள்வாய். இவ்வித ஒழுங்கீனங்களுக்குக் கடவுள் காரண கர்த்தராகார்.

ஒருவன் தன் தந்தை வைத்த பொருளை எல்லாம் துர்வினியோகம் செய்ததுமன்றி, கால நிலைமைக்கேற்றபடி உயிர் வளர்க்கும் படிப்பைக் கற்காமல் பொழுதை வீணர்களோடு கூடி, விளையாட்டில் செலவு செய்ததின் பலனாக வறுமைத் துன்பத்தை அனுபவிக்க நேர்ந்தது. இவன் ஒரு உத்தியோகஸ்தனுக்குக் கூலி வேலை செய்யும்போது அவ்வுத்தியோகஸ்தருடைய பெருவாழ்வைக் கண்டு துக்கித்து 'ஓ கடவுளே! நீர் எனக்கும் தந்தை, அவருக்கும் தந்தை. அவரை எஜமானனாக்கி என்னை அவர் வீட்டுக் கூலியாளாக வைப்பது உமக்கு நீதியோ?' என்று புலம்பினன். இவனை அறிந்துள்ள ஒருவரின்

காதில் இப்புலம்பல் விழ, அவர் 'அடே! உன் காலத்தை முட்டாள் தனமாக விளையாட்டில் கழித்தாயே, இப்போதவ் விளையாட்டு உன்னை வீட்டில் உட்காரவைத்து ஊட்டாதோ' என்று கேட்டார்.

"வேண்டாமென்று உன் தாய் பன்முறை தடுத்தும் நீ கேளாது செய்த காரியத்திற்காக ராஜதண்டனை வர நேர்ந்தால் அது உன் செயலின் பலனா? கடவுளின் அல்லது தாயாரின் குற்றமா? குழந்தாய்! மனிதரைத் தவிர்த்த மற்றெல்லாவற்றிலும் கடவுள் எண்ணம் சரியாக நடைபெறுகின்றது. மனிதர்கள் பெரும்பாலோரில் அவருடைய எண்ணம் தடைபடுகின்றது. இவர்களில் இவர்களிஷ்டம் என்பது தலை எடுத்துக் கூத்தாடுகிறது. இவர்களிலொருவன் ஓர் தத்துவ ஞானியிடம் போய், 'கடவுள் ஏன் துக்கம் நிறைந்த இவ்வுலகத்தை சிருஷ்டிக்க வேண்டும்?' என்று கேட்டான். அப்பா! கடவுளால் நடைபெறும் காரியங்களுக்குக் காரணம் கடவுளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். என்னைக் கேட்டால் எனக்கென்ன தெரியுமென்று பதில் சொன்னார்.

தனக்குள்ளதோடு திருப்தனாகாமல் மற்றெல்லாருடைய சொத்தனைத்தையும் தனதாக்கிக் கொள்ளும் மனமுடையோனுக்குத் தன் எண்ணம் பலிக்காவிட்டால் கடவுள் சிருஷ்டி வெறுப்புடையதாகவே காணப்படும். மற்றெல்லாரும் தன்னைப் போன்ற சுகதுக்க உணர்வுடைய ஜீவான்மாக்கள். அவரவர்களைச் சிருஷ்டித்துக் காப்பாற்றும் கடவுள் ஒருவர் இருக்கின்றார். நாம் நம் வேலைகளைப் பார்த்துக்கொண்டு நமக்குள்ள மட்டில் திருப்தனாகப் பிழைக்கவேண்டும் என்கின்ற மனமுடையோனுக்குக் கடவுள் சிருஷ்டி இன்பகரமாகவே காணப்படும்.

ஒருவன் தெருவிலோடும் நாயொன்றை நிஷ்காரண மாகக் கல்லாலடித்துக் காலை முறித்து நொண்டியாக்கி விடுகிறான். இவன் நடக்கும்போது தரையிலிருந்த கல் தாக்கி இடறிவிழுந்து தன்காலை முடமாக்கிக் கொண் டான். இதற்காக இவன் கடவுளை நிந்திக்கிறான். நாயும் இவன் செய்த காரியத்தைப்பற்றிக் கடவுளிடம் தன் பாஷையில் சொல்லி முறையிட்டிருக்குமல்லவா? மனிதர்களில் காணப்படும் வறுமை சிறுமைகளுக்கும், கஷ்டத்திற்கும் துக்கத்திற்கும் அவரவர்களுடைய துஷ் கிருத்தியங்களே காரணங்களாகின்றன. இவர்கள் அநுபவிக்கும் சுகத்திற்குக் கடவுள் காரணராகின்றனர்.

தாய்வயிற்றில் சிசு வெகுநேர்த்தியாகவும் மிக பந்தோ பஸ்தாகவும் பாதுகாக்கப்பட்டு வளர்கின்றது. விதை யில் மரம் அடக்கப்பட்டுள்ளது. விதையிலிருந்து வெளிப்பட்டு வளர்ந்தமரம் பூ, பிஞ்சு, காய், கனிகளை உதவுகின்றது. சிருஷ்டிப் பொருள்களில் ஏதாவ தொன்றை எடுத்துச் சோதித்துப் பார். பார்க்கப்பார்க்க அறிவாளிக்குக் கடவுளின் பேரறிவையும், அன்பையும், ஜீவகாருண்யத்தையுமே எடுத்து விளக்கிக் காட்டும். எதிலும் எதற்கும் அவர் குற்றவாளியாகார்.

சிஷ்யன்:—ஓ குருநாதா! கடவுளை நம்பி அவரருளைவிரும்பிப் பக்தி செய்பவர்கள் வறுமையால் வருந்துவானேன்?

குரு:—குழந்தாய்! கடவுளிடம் பக்தி செய்கிறவர்கள் நான்கு வகைப்படுவர். சிலர் உலக சம்பத்திற்காகப் பக்திசெய்வர். சிலர் வியாதி பய நீக்கத்திற்காகப் பக்தி செய்வர். சிலர் தம் பகைவர்களின் நாசத்திற்காகப் பக்தி செய்வர். சிலர் கடவுள் தரிசனத்திற்காகப் பக்தி செய்வர். உலக சம்பத்திற்காகப் பக்திசெய்கிறவர்

களுக்குச் செல்வ சம்பத்து வளரவளரச் செல்வச் செருக்கும் வளருமாகில் நல்லோரை வைவர்; பலவீனர்களுடைய சொத்துக்களைத் தமதாக்கிக்கொள்வர். நல்லோருடைய சாபமும், பலவீனர்களுடைய வயிற்றெரிச்சல்களும் இவர்களைப் பலவித கஷ்டங்களுக்குட்படுத்திப் பிச்சை எடுத்துண்ணச் செய்யும். பகைவர்களின் நாசத்திற்காகப் பக்தி செய்கிறவர்கள் தாமே கெடுவர். ஏனென்றால், கடவுளுக்குப் பகைவர் யார்? கடவுள் தரிசனத்திற்காகப் பக்தி செய்யப்பட்டவர்களிடமிருந்து பொன்னும் பொருளுமல்ல, பந்துஜன மித்திரர்கள்கூட விட்டோடினாலும் அவர்கள் கலங்க மாட்டார்கள். இன்னமொருவித பக்தர்கள் உண்டு. அவர்களை அன்பர்களென்று சொல்லலாம். இவர்கள் கடவுளைக்கண்ட மகான்கள். இவர்கள் எல்லாம் தமதென்கிற எண்ணமுடையவர்கள். எல்லாரும் தம்மவர் என்கின்ற பாவனையுடையவர்கள். எல்லாம் தாமே என்கிற நிச்சயஞான முடையவர்கள். உண்மையில் எல்லாம் இவர்களுடையதே.

சிஷ்யன் :—ஓ குருநாதா! மரணமானது பத்துமாதம் சுமந்து பெற்றுப் பாலூட்டி வளர்த்த பிள்ளையைத் தாயிடமிருந்து பறித்துக்கொண்டு போகிறதே! எல்லாவற்றிற்கும் புருஷனையே ஆதாரவாக மனைவி நம்பியிருக்கத் திடீரென அப்புருஷனை எமன் கொள்ளை கொண்டு போகிறானே! தள்ளாத வயோதிக காலத்தில் பிள்ளையின் ஆதாவில் பிழைத்துவரும் தாய்தந்தையரிடமிருந்து அப்பிள்ளையை எமன் மண்ணுக்கிரையாக்கி விடுகிறதினால் கிழவனும் கிழவியும் சாமளவும் மனங்கலங்கிக் கண்ணீர்விட் டழுவதைத் தாங்கள் பார்த்த தில்லையா? பாராவிட்டாலும் கேள்விப்பட்டதில்லையா?

குரு :—குழந்தாய்! மரணத்தைப்போன்ற உபகாரி கடவுளைத் தவிர்த்து, மற்றெவருமே கிடையாது என்கிற உண்மையை மரணத்தின் ரகசியம் என்கிற நூலில் நீ பார்க்கலாம்.

மரணமானது மூன்று வகைத்து : ஒன்று துர்மரணம், இரண்டாவது அகாலமரணம், மூன்றாவது சுபாவ மரணம். சுபாவமரணம் கடவுளாணையால் நடைபெற்று வருகின்றது. அகால மரணத்திற்கும், துர் மரணத்திற்கும், அவரவர்களுடைய வினையே காரணமா யிருக்கிறது.

சிஷ்யன் :—ஓ குருநாதா! இப்போது கடவுள் எங்கே இருக்கிறார்? என்ன செய்கிறார்?

குரு :—குழந்தாய்! அவர் எப்போதும் எங்குமிருந்து கொண்டு எல்லாக் காரியங்களையும் இரவும் பகலும் உறக்கமில்லாமல் ஓய்ச்சல் ஒழிவின்றிச் செய்துகொண்டிருக்கிறார்.

சிஷ்யன் :—ஓ குருநாதா! எல்லாக் காரியங்களையும் அவர் செய்கையில் மனிதனுடைய துக்கத்திற்கும் காரண கர்த்தரவரல்லரோ?

குரு :—குழந்தாய்! மனிதர்களில் இஷ்டம் என்கிறதொன்றுண்டென்று முன்னம் சொன்னேனல்லவா? கடவுள் கருணை நிறைந்த தாயும் தந்தையுமா யிருக்கிறபடியால் அவரவர்களிஷ்டப்படி பலனை அளிக்கிறார். உதாரணமாக, திருடுவது பாபச்செய லென்பதாக உனக்கும் தெரிந்ததே. திருடும்தொழிலில் கைதேர்ந்த ஒருவன் தன்தொழிலில் தனக்கு ஜெய முண்டாகுமாறு கடவுளருளை வேண்டுவன். அவனுக்கே அத்தொழில் சம்மதப்படாதபோது அதை விட்டுவிட முயற்சி

செய்வான். பழக்க வாசனையால் தூண்டப்பட்டுத் திருடப் போனகையில் காவற்காரர் கையில் சிக்குண்டு அரச தண்டனையை அடைகிறான். பன்முறை தண்டிக்கப்பட்டுக் காவலில் வேறுதொழிலில் பழக்கம் உயர உயரப் பழைய பழக்கத்தை மறந்துவிடுகிறான். குழந்தாய்! திருட்டுத் தொழிலைத் தேர்ந் தெடுத்துக் கொண்டது இவனுடைய இஷ்டம். இதிலிவன் ஜெயம் பெற்றது கடவுள் சகாயம். திருட்டுத் தொழிலை விட்டு விட நினைத்தது இவனுடைய இஷ்டம். ராஜ தண்டனைக் குட்படுத்தி வேறோர்தொழில் கற்பிக்கப்பட்டது கடவுள் சகாயம். ஆகவே, மனிதனது ஒவ்வோர் காரியத்திலும் மனிதனது இஷ்டம் கடவுள்துணை இரண்டும் சேர்ந்தேயுள்ளன. எப்போது மனிதன் தன் இஷ்டத்தைப் பூரணமாக விட்டுத் தன்னைக் கடவுளுக்கே ஸமர்ப் பிக்கிறானோ அப்போது மனுஷ்யச் செயல் என்பது போய் அவன் மூலமாகக் கடவுள்செயல் நடக்க ஆரம்பிக்கும். அப்போது குற்றம் குறைவுகள் இவனுக்குக் காணப்படா.

பூமியில் வேரூன்றி வளரும் மரத்திற்கு வேண்டிய உணவு பதார்த்தங்கள் அது இருக்குமிடத்திற்கே கொண்டு வந்து உதவப்படுகின்றன.

ஒவ்வொரு அரசனும் தன் தன் எல்லைக்குட் பட்ட பூபாகத்தோடு திருப்தனாக அரசாக்ஷி செய்வதைவிட்டு, ஒவ்வொருவனும் மற்றவனுடைய ராஜ்யத்தைக் கவர்ந்து இப்பூமியையே தன் சொந்தமாக்கிக் கொள்ள இஷ்டப் பட்டு முயன்றால் கடவுள் யாருக்குத்தான் துணையிருப்பர்? இச்சந்தர்ப்பத்தில் கடவுள் அவரவர்களிஷ்டப்படியே விட்டு ஆட்டம் பார்ப்பதுதான் அவருக்குச் சம்மதமான செயலாக இருக்கலாம். எல்லாரும்

போரில் மாளவேண்டும். அல்லது வல்லவன் ஜெயமடையவேண்டும். இது மனுஷச் செயல்.

சிஷ்யன் :—ஓ குருநாதா! கடவுள் எங்கும் இருக்கிறார் என்னும் சொல் ஒருவரே எல்லாரிலும் இருக்கிறார் என்கிறதாகத் தெரிவிக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணர் ஒவ்வோர் கோபிகை வீட்டில் ஒவ்வோர் கிருஷ்ணராக இருந்தார் என்பதுபோலாகிறதே. கிருஷ்ணர் மானிட தேகத்தோடு பல கிருஷ்ணராக உருவெடுத்து ஒவ்வோர் வீட்டிலும் இருந்திருக்கலாம். கடவுள் ஒவ்வோர் புல் பூண்டு செடி கொடி மரத்திலும், ஒவ்வோர் புழு பூச்சி மீன் பட்சி மிருகம் மனிதர் ஆண் பெண்ணிலும் எப்படி எவ்வுருவத்தோடு இருக்க முடிகிறதோ அது எனக்குத் தெரியவில்லை.

குரு :—குழந்தாய்! ஆங்காங்கு நடைபெற்றுவரும் சிருஷ்டி, திதி, சங்காராதி முத்தொழில்களால் கடவுள் ஆங்காங்கிருக்கிறார் என்று விளக்கமாகத் தெரிகிறதே ஒழிய அவர் எப்படி எவ்வுருவத்தோடு இருந்துகொண்டு இத்தொழில்களை நடத்துகிறார் என்கிற கேள்விக்குச் சரியான பதில் சொல்ல முடியாது. ஆனாலும், காற்றானது நம்மைச் சுற்றிலுமிருக்கிறதென்பதை, நாமறிவோம். இக்காற்றானது வேண்டிய அளவில் நம்முள்ளிலுமிருக்கிறதினால் நாம் பிழைத்திருக்கிறோம். எப்படிக் காற்று நம்முள்ளிலுமிருந்து வெளியிலும் வியாபகமா யிருக்கிறதோ அதேமாதிரி எங்குமுள்ள கடவுள், ஒவ்வோர் உருவங்களிலு மிருந்துகொண்டு சிருஷ்டி, திதி, சங்காராதி செயல்களைச் செய்கிறார் என்று ஒருவாறு சொல்லலாம்.

சிஷ்யன் :—ஓ குருநாதா! இவ்வுதாரணத்தால் கடவுளுக்கு உருவம் இல்லை என்று ஏற்படுகிறதல்லவா?

குரு :—குழந்தாய்! ஆம். ஒரு அருத்தத்தில் கடவுளுக்கு உருவம் கிடையாதானாலும் ஒவ்வோர் உருவத்தின் உத்தம ஸ்தானத்தில் பிரதானப் பொருளாக வீற்றிருந்து முத்தொழில்களை நடத்தும் காரணத்தால் எல்லாத் தேகங்களும் அவருடையதே யாகின்றன.

நம்மிலிருக்கப்பட்ட வாயுவைப் பிராண வாயுவென்றும் வெளியிலிருக்கப்பட்ட வாயுவை ஆகாய வாயுவென்றும், சொல்வதுபோல நம்மிலிருக்கப்பட்ட கடவுளை ஜீவான்மாவென்றும், வெளியிலிருக்கப்பட்ட கடவுளைப் பரமான்மாவென்றும் சொல்லலாம். சொல் மாத்திரத்தாலும், உருவத்திலிருக்கும் காரணத்தாலும், ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வெவ்வேறானவை என அறியப்படினும் இரண்டிற்கும் சம்பந்தம் எங்கும், எப்போதும் இருந்தே இருக்கிறது. வெளி வாயுவுக்கும், உட்காற்றுக்கும் பிரிவினை உண்டாகுங்கால் மரணம் நேரிடுகிறது.

சிஷ்யன் :—ஓ குருநாதா! மேற்சொல்லப்பட்ட விதமாக எல்லா உடல்களிலும் அவர் இருக்கிறார் என்பதைத் தவிர தனக்கெனப் பிரத்யேகமானதோர் உருவம் கடவுளுக்குண்டா?

குரு :—குழந்தாய்! அதுவும் உண்டு. அதை எவரும் அறிகிறதில்லை. ஆனாலும், ஆன்ம பரமான்மதரிசனம் செய்துள்ள மகானின் தேகமே அவருடைய தேகமெனச் சிலர் சொல்லுகிறார்கள். இக்கருத்தை வேத சாஸ்திரங்களும் ஆமோதிக்கின்றன. கடவுளுடைய சகுண ரூபத்தைப் பாராத காரணத்தால்தான் ஆரியர்களும் மற்றவர்களும் பிரம்மா விஷ்ணு சிவன் சரஸ்வதி லக்ஷ்மி பார்வதியாதி மூர்த்தி ரூபங்களைப் பூசிக்கிறதோடு

ஆன்ம பரமான்ம தரிசனம் பெற்றுள்ள மகான்களைச் சிரத்தா பக்தியோடு உபசரித்து அவர்களுடைய தேகங்கள் அடக்கம் செய்யப்பட்ட சமாதியின் மேல் இலிங்க உருவை ஸ்தாபித்து ஆலயங்கள் கட்டி உத்ஸவாதிகள் நடத்துகிறார்கள். இவ்வாறு இவர்கள் செய்வது கடவுளுடைய சகுண ரூபத்தை வணங்குவதற்குச் சமானமான தென்பது இவர்களுடைய அபிப்பிராயம்.

சிஷ்யன் :—ஓ குருநாதா! இவ்வித பூசைகளைப் பிரிய முடன் பொருட் செலவிட்டுச் செய்வதைக் காட்டிலும் எவ்வுயிரையும், அதிலும் சுகதுக்க உணர்வை அதிகமாகப் பெற்றுள்ள மனிதர்களை மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் புண்படுத்தாதிருப்பது கடவுளுக்குச் செய்யும் உத்தமமான பூசையாகாதோ?

குரு :—குழந்தாய்! இவ்வித பூசையைச் செய்ய இவ்வுலகில் மிகச் சிலருக்கே முடியுமல்லாது மற்றவர்களால் முடியாது. பூரண அறிவாளியும் அன்பருமா யிருக்கப் பட்டவர் எவரோ அவர்தான் இவ்வித பூசைசெய்யத் தகுந்தவர். பெரும்பாலோர், அறிவிலும் அன்பிலும் ஏற்றத் தாழ்வான நிலையிலிருந்து வளர்கிறபடியால் இவர்களால் நடத்தப்படும் கடவுள் பூசையும் நானாவிதங்களாகவே யிருக்கும்.

சிஷ்யன் :—ஓ குருநாதா! கடவுளுக்குப் பிரத்யேக தேகவுருவமும், பலகோடி ஜீவதேகவுருவங்களும் ஜீவான்ம பரமான்ம உருவங்களும் இருக்கிறதாக ஏற்படுகின்றன. சரியே. ஒருயிரை மற்றோருயிர் கொன்று தின்பதைப் பார்க்கும்போது கடவுள் தன்னையே தான் சாப்பிடுவதாக நினைக்கவேண்டி வருகிறதே?

குரு:—குழந்தாய்! ஏதேது!! கேள்வியை அத்துமீறிக் கேட்க ஆரம்பித்து விட்டாய். பாம்புருவெடுத்த கடவுளுக்குத் தான் கடவுளென்கிற அறிவு மறைய அது தன்னைப் பாம்பெனவே மதித்துள்ளது. அது தவளைகளைப் பிடித்து விழுங்குவது அதன் இயற்கைக் குணம். அதனிடம் போய் நீ ஞானோபதேசம் செய்ய முடியுமா? புலியுருவெடுத்தக் கடவுளுக்குத் தான் கடவுளென்கிற அறிவு போய் தன்னை அது புலி எனவே நினைத்துள்ளது. அது ஆடுமாடுகளை அடித்துத் தின்பது அதன் சுபாவ குணம். அதனிடம் உன் ஜீவகாருண்ய ஞானம் பலிக்குமா? கடவுளறிவுள்ள மனிதர்களிலும் மிருகத்தன்மையுடையவர்களை நீ பார்த்ததில்லையா? இவர்களிடம் ஜீவகாருண்ய ஞானம் பதிந்து வேரூன்றி வளர, மகான்கள் பட்டுள்ள கஷ்டங்களை நீ புஸ்தகங்களில் படித்ததில்லையா? அறியாத காலங்களில் இன்பமுடன் செய்த காரியங்களை அறிவு வளருங் காலங்களில் மனிதர்கள் சந்தோஷமாக விட்டுவிடுகிறதை நாம் இவ்வுலகில் பார்க்கிறோம்.

அசுரர்களைச் சங்கரிக்கும் நிமித்தம் காளி உருவெடுத்த பார்வதி அவ்வசுரர்களைச் சங்கரிக்கிற அவசரத்தில் தன்னை மறந்து வீராவேசத்தோடு ஓடும்போது எதிர்ப்பட்டவைகளையெல்லாம் வெட்ட ஆரம்பித்து விட்டாள். இதை அறிந்த சிவன் காளியின் வீராவேசத்தை அடக்கிப் பழைய பார்வதி யுருவாக மாற்ற அவர் செய்துள்ள சூழ்ச்சிகளை நீ புராணங்களில் படித்ததில்லையா? சிருஷ்டியில் எத்தனையோ விதமான காரியங்கள். இவைகள் ஒன்றற்கொன்று விரோதமுள்ளவையாக இருக்கலாம். மானிட உருவெடுத்துள்ள நீ என்னை அடுத்ததற்கு மேல்நோக்கி அபிவிருத்தியாகும் தொழிலைவிட்டு ஆபாசமான கேள்வி

களைக் கேட்பதில் காலத்தை நீ செலவு செய்வது எனக்கு அசம்மதமாகவே யிருக்கிறது.

சிஷ்யன் :—ஒ குருநாதா! கடவுளுடைய சகுண ரூபத்தை நான் பார்க்க முடியாதானுலும் அவருடைய நிராகார ஆன்மபரமான்ம ரூபத்தையேனும் நான் பார்க்க முடியுமா ?

குரு :—மகனே! நீ முதலில் உன் ஆன்ம ரூபத்தைப் பார்ப்பாயானுல் பிறகு கடவுளுடைய பரமான்ம ரூபத்தைத் தரிசிக்கவல்லவனுகிருய்.

சிஷ்யன் :—ஒ குருநாதா? என் ஆன்மரூபம் எது?

குரு :—மகனே! கடவுள் உன்னில் இருக்கிருரென்று முன்னம் சொன்னேனல்லவா? அது தான் உன் ஆன்ம ரூபம்.

சிஷ்யன் :—ஒ குருநாதா! நான் என் தேக வுருவத்தைக் கண்ணுடியில் பார்க்கிறேன். என்மனதை நான் என் அபிப்பிராயங்களால் அறிகிறேன். என் ஆன்ம ரூபத்தை நான் பார்ப்பதெப்படி ?

குரு :—மகனே! நான் என் தேகத்தைப் பார்க்கிறேன். நான் என் மனதை அறிகிறேன். நான் என் ஆத்மாவைப் பார்ப்பதெப்படி? என்கிற சொற்களிலிருக்கப்பட்ட நான் என்கிற சொல்லுக்குப் பொருளா யிருப்பது எதுவோ அதுதான் ஆன்மா.

சிஷ்யன் :—ஒ குருநாதா! என் ஆத்மாவை நான் பார்த்தல் என்கிற சொல், என்னை நான் பார்த்தல் என்கிற அருத்தத்தைத் தருகிறதே!

குரு :—மகனே! ஆம். உன்னை நீ பார்ப்பதே ஆன்மதரிசன மெனப்படுவது. அது நீ. ஆன்மா நீ.

சிஷ்யன் :—ஓ குருநாதா! ஆன்மாவைக் கடவுளென்போமாணுல், நான் கடவுளல்லவா ?

குரு :—மகனே! ஆம். நீ கடவுள்தான். இதை நீ ஒத்துக் கொள்ளாவிட்டால் மேற்கதி என்பதற்கு முடிவேயில்லை.

சிஷ்யன் :—ஓ குருநாதா ! நான் கடவுளாணுல் சிருஷ்டி திதி சங்காராதித் தொழில்கள் என்னுல் நடத்தப்படவில்லையே ?

குரு :—மகனே ! ஏன் ! நீ உன்மனைவியோடு கூடி மக்களைப் பெற்றுக் காப்பாற்றுவது சிருஷ்டி, திதி. உன் முன் பலர் சாவதை நீ பார்ப்பது சங்காரம்.

சிஷ்யன் :—ஓ குருநாதா ! இது சொல்மாத்திர ஞானமே ஒழிய உண்மை அனுபவ ஞானமாகாது.

குரு :—மகனே ! வாசா ஞானமென்று இப்போது சொல்லுகிருயல்லவா ? இதை உண்மை அனுபவ ஞானமென்று பின்னிட்டு நீயே ஒத்துக்கொள்ளப் போகிருய்.

சிஷ்யன் :—ஓ குருநாதா ! அது எப்படி ?

குரு :—மகனே ! நீதூங்கும்போது உன்னை நீ மறக்கிருய். அதாவது நீ உன் தேக அறிவை இழக்கிருய். தேக அறிவு போனபோது நீ படுத்துறங்கும் வீட்டின் ஞானமும் உலக ஞானமும் கூடவே போய்விடுகின்றன. நீ ஏதோ ஒரு பட்டணத்தில் அப்பட்டணத்து ரெயில் ஸ்டேஷனில் மற்ருேர் தூர தேசத்திற்குப் போகப் பணத்தைக் கொடுத்துப் பயணச் சீட்டை வாங்கிக் கொண்டு ரெயில் வண்டியின் வரவை எதிர்பார்க்கிருய். ரெயில் வண்டி வந்து நின்றது. பிரயாணிகள் வண்டியிலிருந்து இறங்குவதையும் வண்டியிலேறுவதையும் பார்த்தாய். நீயும், உனக்கிஷ்டமானதோர் அறையில்

உட்கார்ந்து கொண்டாய். வண்டி பக்கத்து ஸ்டேஷனில் நின்றது. நீயிருக்கும் அறைக்குள் ஓர் பெண் வந்து உட்கார்ந்தாள். நீ அவளோடுபேச அவள் உன் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். இருவருக்கும் பரஸ்பரம் நேசம் உண்டாயிற்று. அவள் உன்னைத் தான் இறங்கவேண்டிய இடத்தில் இறக்கித் தன் விட்டிற்கழைத்துக் கொண்டு போய் தன் தாய் தந்தையரிடம் உன்னைப் பரிசயம் செய்வித்தாள். பிறகு நீ அவளை மணம் செய்து கொண்டு அவளோடு அவள் தாய் வீட்டில் நிலைத்திருக்கச் சம்மதப்பட்டு அவ்வூரில் ஓர் உத்தியோகத்திலமர்ந்து உன் சம்பளத்தை மாதம் மாதம் அவளிடம் கொடுத்துக் கொண்டிருந்தாய். மக்களில்லாக் குறைவால் நீயும் அவளுமாக நாடோறும் இரவு எட்டு மணிக்கு அவ்வூரில் மிகப்பிரசித்தமாயிருக்கப்பட்டதோர் விநாயக ராலயத்திற்குப் போய் விநாயகரைச் சேவித்து வீட்டிற்குத் திரும்புவீர்கள். பிறகு, நீயும் அவளுமாகத் தீர்த்தயாத்திரை ஸ்தலயாத்திரை செய்தீர்கள். விவாகமான எட்டுவருஷங்களுக்கு மேல் ஒன்றன் பின்னொன்றாக மூன்று ஆண் இரண்டு பெண்களைப் பெற்று வளர்த்தீர்கள். முதல் பிள்ளைக்கு இருபதாமாண்டில் உன் ஊருக்கு நூறு மைல் தூரத்திலிருக்கப்பட்ட ஒரு கிராமத்துப் பெண்ணைப் பேசிக் கல்யாணம் செய்தீர்கள். தம்பதிகள் மனமொத்து வாழ்ந்து வருகையில் மருமகள் கருப்பவதியா யிருந்து பிரசவ வேதனையால் மாணமடைந்தாள். உறவின் முறையா ரெல்லாம் கூடி அழ நீயும் அழுதாய். இரண்டு வருஷத்திற்குப் பிறகு உன் பிள்ளைகளி லொருவன் கொள்ளை நோயால் இறந்தான். அவனை ஸ்மசானத்திற்குக் கொண்டுபோய் தகனம் செய்துவிட்டு வீட்டிற்கு

வந்தாய் உன்மனைவி உன்னைக் கட்டிக்கொண்டு அழ நீ அவளைக் கட்டிக்கொண்டு அழுதாய். நீ திடீரென விழித்துக்கொண்டாய். முந்திய துக்கமும் மனத்துடிப்பும் நீங்கின பாடில்லை. நீ உன்னைத் திடப்படுத்திக் கொண்டாய். இதெல்லாம் கனவு என அலட்சிய புத்தி வந்ததும் தெளிவை அடைந்தாய். மகனே! நீ தூங்கப் படுக்கைக்குப் போகையில் மணி பத்து. விழித்தபோது கடியாரத்தைப் பார்த்தாய். மணி பன்னிரண்டு. இரண்டு மணிநேரத்தில் சுமார் முப்பது முப்பத்தைந்து வருஷகால நிகழ்ச்சிகளை அனுபவித்தாய். இது என்ன விந்தை!

மகனே! சொப்பனகால அனுபவ உணர்ச்சிகள் உன்னை விட்டகலவில்லை. அப்போதைய மனைவி மக்களுடைய உருவப் பதிவுகள் உன் மனதிலிருக்க நீ பார்க்கிறாய். நீ இருப்பதோ எண் ஜாண் உடம்பில். நீ படுத்துறங்கின இடமோ பதினெட்டு சதுர கஜ சுற்றளவுள்ள தரைமேல் கட்டப்பட்ட வீட்டினறை. இவ்வுலகத்திற்குச் சமனான உலகம் தூக்கத்தில் சிருஷ்டித்து நிலைக்கச்செய்து அழிக்கப்பட்டதே! நீ உறங்கச் சிருஷ்டிக்கப் பட்டது. நீ விழிக்க அழிக்கப்பட்டது. இப்போது சொப்பன உலகத்திற்குச் சிருஷ்டி திதி சங்கார கர்த்தா யார்?

சிஷ்யன் :—ஓ குருநாதா! நித்திராசக்தி சொப்பன உலகத்தை சிருஷ்டிக்கிறதென்று சொல்லலாமல்லவா?

குரு :—மகனே! நித்திரை யாருக்கு?

சிஷ்யன் :—ஓ குருநாதா! எனக்கு.

குரு :—மகனே! அச்சக்தி எங்கிருந்து வந்தது?

சிஷ்யன் :—ஓ குருநாதா! என்னிடமிருந்து வந்தது.

குரு :—மகனே! நித்திராசக்திக்குப் பிறப்பிடமாயிருக்கும் நீ அச்சக்தியால் சிருஷ்டிக்கப்படும் சொப்பன உலகங்கட்கும் கர்த்தனுயிருக்கிறுய். சக்தி உனக்குத் துணைக் கருவியாகவும் முத்தொழில்களுக்கான சாமான்கள் ரூபியாகவும் இருந்து வருகிறுள். சிருஷ்டிகர்த்தா நீ. சிருஷ்டிக்கப்படும் பொருள்கள் அவள் மயம். காண்பான் நீ. காணப்படும் பொருள்கள் அவள் மயம். உண்பான் நீ. உண்ணப்படும் பதார்த்தங்கள் அவள் மயம். அனுபவி நீ. அனுபவிக்கப்படும் பொருள்கள் அவள் மயம். ஆத்மரூபி நீ. தேகரூபி அவள்.

சிஷ்யன் :—ஓ குருநாதா! சக்தியைப் பெண்பாலில் பேசுகிறீரே?

குரு :—மகனே! சிருஷ்டிக்கு முதற் காரணமாயிருக்கப்பட்ட நின்னை நான் ஆண்பாலில் பேசும்போது உனக்குத் துணைக் காரணமாயிருக்கப்பட்ட சக்தியைப் பெண்பாலில் பேசினுலென்ன? ஆண், பெண் இருவர் சேர்க்கையால்தான் சந்தான விருத்தி யாகின்றது. குழந்தைகளைப் பாலூட்டி வளர்ப்பவள் பெண். புருஷனுக்குப் பணிவிடை செய்பவள் பெண். ஈசுவரனுக்குச் சுகானுபவத் திருவுருவாயிருப்பவள் பெண். சிருஷ்டி திதி சங்காராதி முத்தொழில்களுக்கும் உபாதான காரணமாயிருக்கப்பட்ட சக்தியைப் பெண்பாலாகக் கருதுவதில் பாதகமில்லை.

மகனே! உன்னிடமிருந்து வெளிப்பட்ட நித்திராசக்தி உன்னிலேயே சொப்பன பிரபஞ்சத்தைக் கற்பித்து வைத்திருந்து, நீ விழித்தபோது உன்னில் மறைகின்றது.

சிஷ்யன் :—ஓ குருநாதா! சக்திக்குப் பிறப்பிடமாயும், சொப்பன உலகத்திற்கு இருப்பிடமாயும் இருக்கும்

நான் சக்தியைக் காட்டிலும், அச்சக்தியால் கற்பிக்கப் பட்ட சொப்பன உலகங்களைக் காட்டிலும் மகா பெரிய வனாக இருக்க வேண்டுமல்லவா?

குரு:—மகனே! ஆம். நீ மற்றெல்லாவற்றைக் காட்டிலும் மகா பெரிய அகண்ட ஆன்மரூபி என்பதில் சந்தேகம் சிறிது மில்லை.

சிஷ்யன்:—ஓ குருநாதா! அது எப்படி?

குரு:—மகனே! மண்ணைக் காட்டிலும் நீர் அதிகமா யிருக் கிறது. ஆகவே, நீர் மண்ணைவிடப் பெரியது. இதைப் போலவே நீரைவிட நெருப்பு பெரியது. நெருப்பைக் காட்டிலும் காற்று பெரியது. காற்றைக் காட்டிலும் ஆகாயம் பெரியது. ஆகாயத்தைக் காட்டிலும் மனது பெரியது. மனதைக் காட்டிலும் ஆன்மா பெரியது. ஏனென்றால், மனமானது உன்னால் ஆளப்படுகின்றது. ஆன்மாவைக் காட்டிலும் பெரிய பொருளை எவரும் இதுவரையில் பார்த்ததில்லை. ஆகையால், ஆன்மா எல்லாவற்றிலும் பெரியதும் முடிவானதுமா யிருக் கிறது. மகனே! மண் நீரில் கரைந்து மறைகின்றது. நீர் நெருப்பால் விழுங்கப்படுகின்றது. நெருப்புக் காற்றால் அணைக்கப்படுகிறது. காற்று ஆகாயத்தி லடங்குகிறது. ஆகாயம் மனதி லடங்குகிறது. மனம் ஆத்மாவி லடங்குகிறது. ஆத்மாவைக் காட்டிலும் மேலானதோர் பொருள் இல்லாததால் ஆத்மாவே எல்லாவற்றிற்கும் அடைக்கல ஸ்தானம். மகனே! உன் கண்களால் பார்க்கப்படும் இவ்வாகாயப் பெருவெளி நீ கண்களை மூடிக்கொண்டால் உன் மனதால் பார்க்கப் படுகின்றது. மனதைப் பார்த்து அதை அடக்கி ஆளவல்ல நீ மனதைக் காட்டிலும் பெரியவனும் மன

திற்கும், பஞ்ச பூதங்கட்கும் பிறப்பிடமும் இருப்பிடமும் அடைக்கல ஸ்தானமுமா யிருக்கிறாய்.

சிஷ்யன் :—ஓ குருநாதா! சொப்பன உலகம் தான் என்னால் சிருஷ்டிக்கப்படுகிறதென்று வைத்துக் கொள்வோம். இஜ்ஜாக்கிர உலகத்திற்கு சிருஷ்டி கர்த்தர் யார்?

குரு :—மகனே! இச்சாக்கிர உலகமும் உன்னால் தான் சிருஷ்டிக்கப்படுகின்றது.

சிஷ்யன் :—ஓ குருநாதா! இது எனக்குச் சம்மதமான விடையாக இருக்கவில்லை.

குரு :—மகனே! சொப்பன உலகத்தி னமைப்பிற்கும் அனுபவத்திற்கும், ஜாக்கிர உலகத்தி னமைப்பிற்கும் அனுபவத்திற்கும் பேதமில்லாதபோது, சொப்பன உலகத்திற்குக் கர்த்தா நீ என ஒத்துக் கொள்ளும்போது ஜாக்கிர உலகமும் உன்னால் தான் சிருஷ்டிக்கப்படுகிறதென்று நீ தடையின்றி ஒத்துக் கொள்ளலாம்.

சிஷ்யன் :—ஜாக்கிர உலகத்தில் நடைபெறும் காரியங்களெல்லாம் பராதீனமாக இருப்பதை நான் பிரத்தியக்ஷமாகப் பார்க்கையில் நான்தான் ஜாக்கிர உலகத்திற்குக் கர்த்தனென ஒத்துக்கொள்ளுவ தெப்படி?

குரு :—மகனே! சொப்பன காலத்திலும் எல்லாம் பராதீனமாக நடை பெறுவதாகக் கண்டாய். விசாரிக்கையில் அதற்குக் காரணகர்த்தன் சொப்பனக் காட்சியைக் காண்பவனான நீயே அக்காட்சிகளுக்குக் கர்த்தனெனத் தீர்மானிக்கையில் ஜாக்கிர உலகைக் காண்கிற நீ இஜ்ஜாக்கிர உலகக் காட்சிகளுக்கும் காரணகர்த்தன் நீ என ஏன் நீ தீர்மானிக்கலாகாது? மகனே! நீ அறிந்து செய்யும் காரியங்கள் மிகச் சில. நீ அறியாமல் செய்

யும் காரியங்கள் மிகப் பல. உண்பது நீ அறிந்துசெய்யும் காரியம். ஜீரணிப்பதும், ரக்தமாக மாற்றுவதும் இரத்தத்தைத் தோல் சதை தசை நரம்பு நகம் மயிர் சுக்கிலமாக உருப்படுத்துவதும் நீ அறியாமல் செய்யும் காரியங்கள். புருஷனோடு பெண் சையோகம் செய்யும் காரியம் அவளறிந்தது. கருக்குழியில் விழுந்த சுக்கில சுரோணிதத்தை அழகிய குழந்தை வடிவாகச் செய்து வளர்த்து வெளிப்படுத்துவது அவளறியாமல் செய்யும் காரியங்கள்.

சிஷ்யன் :—ஓ குருநாதா! சொப்பன உலகமோ தூங்கும் போதெல்லாம் நூதன நூதனமாகச் சிருஷ்டிக்கப்பட்டு, தூங்கும் வரையில் நிலைத்திருந்து விழித்த போது இல்லாமற் போகிறது. ஜாக்கிர உலகமோ அப்படிக் கில்லாமற் போகிறதில்லையே?

குரு :—மகனே! நீ சொப்பன உலக அனுபவியா யிருக்கும் போது ஜாக்கிர உலகம் இல்லாமற் போகிறதில்லை என்று உனக் கெப்படித் தெரியும்?

சிஷ்யன் :—ஓ குருநாதா! விழித்தபோது பழையபடி அது இருக்கும் அனுபவத்தால்.

குரு :—மகனே! தூங்கி விழித்த சற்று நேரத்தில் மறுபடியும் நீ தூங்கிவிட்டால் முந்திய சொப்பனப் பிரபஞ்சக் காக்ஷியையே நீ தொடர்பாகக் கண்டு அனுபவித்தது உண்டா?

சிஷ்யன் :—ஆமாம். பகவானே! அவ்வனுபவமும் எனக்கு உண்டு.

குரு :—மகனே! சொப்பன உலகக் காட்சிகளும் ஜாக்கிர உலகக் காட்சிகளும் நீ சொப்னுவஸ்தையை அடையும் போதும், நீ ஜாக்கிராவஸ்தையை அடையும் காலத்தும்

உன்னில் தோன்றி நிலைத்திருந்து மறைந்து போகப் பட்டவைகளே. இவைதான் சிருஷ்டி திதி சங்காராதி முத்தொழில்களின் இரகசியம்.

மகனே! சொப்பன உலகம் சிருஷ்டிக்கப்படுவதற்கு உபாதான காரணமா யிருக்கப்பட்ட நித்திரா சக்தியையும், ஜாக்கிர உலகம் சிருஷ்டிக்கப்படுவதற்கு உபாதான காரணமா யிருக்கப்பட்ட மாயா சக்தியையும் நீ ஜெயிப்பாயானுல் இப்போதே நீ இவ்விரு உலகக் காட்சிகளை இல்லாமற் செய்து விடுவாய். அதாவது சங்காரம் செய்து விடுவாய். சங்காரக் கர்த்தனே சிருஷ்டி கர்த்தா. சிருஷ்டி கர்த்தனே திதி கர்த்தா. சிருஷ்டி, திதி, சங்காராதி முத்தொழில்கள் இல்லாத நிலையில் உன்னை நீ பார்க்கிருய். மகனே! முதலில் நீ வேடிக்கையாகச் செய்து கொண்ட உன் செயலே வினையாக முடிந்து, பிறகு அவ்வினையானது இம்முத் தொழில்களைச் சுலப சாத்தியமாக உன்னைக் கொண்டே செய்வித்துக் கொண்டிருக்கிறது. ஆகையால்தான், எல்லாம் பராதீனமாக நடக்கிறதென்று நீ நினைத்துள்ளாய்.

சிஷ்யன் :—பகவானே! நித்திரா சக்தியையும் மாயாசக்தியையும் ஜெயிப்ப தெப்படி?

குரு :—மகனே! மாயா சக்தியை ஜெயித்துவிட்டால் நித்திரா சக்தி இல்லாமற் போகிறது. நீ ஜாக்கிர உலகவாசியாக இருக்கும் காலங்களில் மாயாசக்தியை ஜெயிக்கவேண்டும். இது கஷ்ட சாத்தியமான காரியமென்று நீ மலைக்கவேண்டாம். இது சுலப சாத்திய காரியமாகவே இருக்கிறது.

சிஷ்யன் :—ஓ பகவானே! அது எப்படி?

குரு :—மகனே! காரியத்தைக் கொண்டு ஜெயிக்க யத்தனம் செய்தால் மாயாசக்தி வசப்படாத மகா வல்லமையுள்ளவளாகவே உன்னை பிரமிக்கச் செய்வள். காரணத்தை அறிந்து கொண்டால், அவள் வசப்படக்கூடிய மிக அழகிய சிறு குழந்தையைப் போன்றவளே. உன்னுடைய முதல் நினைவே அவளுடைய உருவம். இம் முதல் நினைவே மற்றெல்லா நினைவுகளுக்கு மூல காரணம். எதையும் நினையாமல் சும்மா இருக்கப் பழகுவாயானல் மாயாசக்தி மெலிவுற்று, வலி இழந்து உன்னிலடங்குவாள். அவளடங்க உலகக் காட்சிகளெல்லாம் அடங்கும். உலகக் காட்சிகளில்லாம விருக்கும்போது உன்னை நீ பார்க்கிறுய். இதுதான் உன்னுடைய மோக்ஷ நிலை. ஆன்ம தரிசனம் என்கிற நூலையும் நீ படிப்பாயாக.

சிஷ்யன் :— ஓ பகவானே! அண்ட பிண்ட பிரம்மாண்டாதி உலைகங்களுக்கும், அவைகளி லிருக்கப்பட்ட உயிர்களுக்கும் உடலுருவங்களைக் கட்டிக்கொள்ள சாமக்கிரியைகளைக் கொடுத்துதவும் உபகாரியும், என் சுகானுபவத்தினிமித்தம் எனக்குத் துணைவியா யிருக்கிறவளுமான மாயையை நான் ஜெயித் தடக்குவதைவிட அவளை வேலை செய்யவிட்டு அவளது விசித்திர, விநோதக் காட்சிகளைப் பார்த் தானந்திக்கும் ஜாக்கிர, சொப்பன உலக நிலைகளிலேயே நானிருக்கலாகாதா?

குரு :—மகனே! இருக்கலாம். ஆனல், ஜனன மரணங்கள் உன்னைவிட் டகலமாட்டா.

சிஷ்யன் :—ஓ பகவானே! ஜனன மரணங்கள் என்னைவிட் டகலாவிட்டால் பாதகமென்ன?

குரு :—மகனே! நீ இப்போது மரணமடைந்தால், நீயே கதி என்று உன்னை நம்பிப் பிழைத்து வரும் உன் மனைவி

யைத் துன்பக் கடலில் வீழ்த்துவாயே. உன் னுதர வினுல் சுக ஜீவனம் செய்கிற அவள் மரண பரியந்தம் கஷ்ட ஜீவனம் செய்வதால் பற்பல அசம்மத, அவமா னச் செயல்களுக்குடன்பட நேருமே. உன்னுலும் உன் மனைவியாலும் பிரியமுடன் போஷிக்கப்படும் உன் மக் கள் இவ்வுலகில் ஏங்கித் துக்கித் தழுவார்களே. யாரிருந் தாதரித்தாலும் பிள்ளைகளுக்குப் பெற்ருேரைப் போன்றவ ராவரோ? உன்னைப் பெற்று வளர்த்துப் பணச் செலவால் படிப்பித்த உன் தாயும் தந்தையும் மகனிருக்க நமக்கென்ன குறை. நாம் செத்தாலும் வைதீக கருமங்களை விதிப்படி நடத்தி நம்மை நற்கதிக் காளாக்குவான் என்கிற சந்தோஷத்தோடிருக்க அவர்களைச் சிரத்தையோ டுபசரிக்கக் கடமைப்பட் டுள்ள நீ மறைந்தால் அவர்கள் கலங்கிக் கண்ணீர் விட்டுப் பரிதவிப்ப ரன்ருே? மகனே! மேலும் என்னை அடைந்த உனக்கு நான் அதி ரகசியமான அத்வைத ஞானத்தைச்சொல்ல நேர்ந்தது. இந்த அத்வைத ஞானத்தைக்கேட்ட நீ கேட்டபடி அனுபவஞானியாகா விட்டால் எல்லாம் என்னுலேயே சிருஷ்டிக்கப் படுகிறது. என்னுலேயே எல்லாம் காப்பாற்றப்படுகிறது. நானே எல்லாவற்றிற்கும் கர்த்தா. என்னிஷ்டப்படி நான் நடந் தால் எனக்கெப் பாவமுமில்லை என்கிற அகங்கார ஞானத்தால் பலருக்குக் கெடுதலான காரியங்களைச் செய்யத் துணிந்துவிடுவாய். அப்போதுன்கதி பிரக லாதன்முன் ஹிரணியன்பட்ட பாடாகவே முடியும். என் சம்மதப்படி நீ ஆன்ம பரமான்ம தரிசனம்பெற்று, எல்லா ஜீவாத்ம சொரூபங்களா யிருக்கப்பட்டவன் நீ என்று உன்னை நீ அறிந்துகொண்டால், உனக்கெக் காலத்தும் எக்கேடுமே யில்லை. உன்னை எல்லாரும்

பூசித்துபசரிப்பர். எனக்கும் நீ பிரியனாகி, என் ஆசீர் வாதத்தால் பேரானந்தாநுபவ ஜீவன் முக்தனாகப் பிழைத்திருப்பாய்.

சிஷ்யன் :—ஓ குருநாதா! சொரூப தரிசனம் பெற்றால் எனக்குச் சாவு கிடையாதா?

குரு :—மகனே! சொரூப தரிசனமே முடிவானசாவு. முடிவானசாவே மோக்ஷநிலை. முடிவான சாவே முடிவான பிறவி.

சிஷ்யன் :—பகவானே! சொரூபதரிசனமே முடிவானசாவு என்று சொல்லப்படுகையில் இதிலும் மேற்சொல்லப் பட்ட சங்கடங்கள் இருக்கிறதாகக் காணப்படுகிறதே?

குரு :—மகனே! சொரூப தரிசனத்தால் நீ சாகாமல் செத்தவனாகிறாய். சாதாரணசாவில் ஆத்மாவும், மனதும் பிராணனும் கூடி வெளிப்பட்டுப் போகின்றன. இம் மூன்றும் இல்லாத தேகம் கட்டுக்கலைந்து, அழுகி, உருக்குலைந்து போகிறது. சொரூபதரிசனம் பெற்ற மகானுடைய தேகம் உயிர்த்திருந்து பேசுகிறது. உண்ணல் உடுத்தல் முதலிய காரியங்களை எப்போதும்போலச் செய்கின்றது. மனம் ஆத்மாகாரப்பட்டு அன்புருவாக மாறிவிட்டபடியால் அதனுடைய நினைப்பும், பேச்சும் ஞானமாகவே யிருக்கும். உலக சம்பந்தமான நினைப்பும் பேச்சும் இந்த ஆத்மஞானிக்கு அருவருப்பாகவே யிருக்கும். உலக சம்பந்தமான நினைவுகளை நினைக்கவும் உலக சம்பந்தமான பேச்சுகளைப் பேசவும் பழக்கப்பட்ட அசுத்தமனம் சுத்தமனமாக மாற்றப்பட்ட காரணத்தால் சொரூப தரிசனம்பெற்ற மகான் உலகநிலையில் செத்தவனென்றும், ஆத்ம நிலையில் பிழைத்தவனென்றும் சொல்லப்படுகிறார். மகனே! இவர் தேகத்துடனிருந்தும்

தேகபாவனை யில்லாதவர். இவர் உலகத்திலிருந்தும் உலக பாவனையில்லாதவர். இவர் தேகத்துடனிருந்தும் ஆத்ம அறிவில் நிலைத்து, தான் ஆத்மாவென ஆத்மப் பிரஞ்ஞையி லிருக்கிறவர். தனக்கும் பரமாத்மாவாகிய கடவுளுக்கும், தனக்கும் உலகத்திற்கும் சிறிதள வேனும் பேதமிருக்கிறதென்கிற நினைவு சற்றுமில்லாத வர்.

சிஷ்யன் :—ஓ குருநாதா! சொரூப தரிசனம் பெற்றுள்ள மகானின் சாவைப்பற்றி மகாசமத்காரமாகச் சொல்லி முடித்தீர். அவருக்கு அது முடிவான பிறவி என்றீர், ஆனால் அவர் சாவதும் பிறப்பதுமில்லையா?

குரு :—மகனே! சொரூப தரிசனம் செய்யும்போது அவருடைய சொரூபப்பிரகாசத்தில் அவருடைய உடலும் மற்றெல்லா ஜீவாத்மாக்களுடைய உடல்களும் இவைகளுக்குச் சம்பந்தமான ஸ்தூல, சூக்ஷ்ம உலகங்களும் இல்லாமற்போய் தான்மாத்திரம் சொரூபப் பிரகாசத்தின் மைய உருவாக இருக்கக் காணும்போது தன்னைத் தவிர்த்த மற்றெல்லாமுமே செத்ததெனச் சொல்லலாம். மறுபடியும் இவர் தன்னுடலையும் மற்றெல்லா உடல்களையும், உலகங்களையும் பார்க்கும்போது செத்தவை உயிர் பெற்றெழுந்ததெனச் சொல்லலாம். இந்த அருத்தத்தில் இவருக்கும் பிறவி உண்டென்று சொல்லலாம். மகனே! நீ அபிப்பிராயப்பட்டுக் கேட்கிறபடி சொரூப தரிசனம்பெற்ற ஆத்மஞானி பிறப்பதும், இறப்பதும் அவரிஷ்டமே. அவருக்கிஷ்ட மிருந்தால் மறு ஜனன மெடுப்பர். அவருக்கிஷ்ட மில்லாவிட்டால் எடுக்க மாட்டார். அன்னியர் பார்வைக்கு அவர் சாகிறதாகக் காணப்படுகிறாரே ஒழிய அவருக்குச் சாவு கிடையாது.

மகனே! சொரூபதரிசன ஞானமில்லாத மனிதர் செத்தால் கருமாதீனமாக ஜனனமெடுப்பர். சொரூப தரிசனம் பெற்றுள்ள மகான் செத்தால் சுயாதீனமாகத் தன்னைப் பிறவிக்குட்படுத்திக் கொள்ளலாம். ஆனால், வேத சாஸ்திரச் சம்மதப்படி சொரூபதரிசனம் பெற்ற வன் ஜனன மரணங்களினின்று விடுபட்டவன் என்பதில் சம்சயமில்லை.

சிஷ்யன்:—ஓ பகவானே! நித்திராசக்தியைத் துணையாகக் கொண்டு நான் சொப்பன உலகத்தை சிருஷ்டித்தழிக்கும் காரணத்தாலும், மாயாசக்தியைத் துணையாகக் கொண்டு ஜாக்கிர உலகத்தை நான் சிருஷ்டித்தழிக்கும் காரணத்தாலும், சொரூபாகாரமாக நின்று என்னை நான் தனித்த ஒருவனாகப் பார்க்கும் காரணத்தாலும் என்னை முத்தொழிலுக்குமதிகாரி என்றும், என்னைக் கடவுளென்றும் தாங்கள் எனக்குபதேசிப்பதானது நீரீசுவர வாதமாகின்றதே!

குரு:—மகனே! இது நிரீசுவர மதமாகாது. சிருஷ்டி திதி சங்காராதித் தொழில்களுக்கோர் கர்த்தனில்லை. அவை தாமாகவே நடக்கின்றன. அனைத் துயிர்களிலும் அழியாப் பொருளான ஆத்மா ஒன்று இல்லை. மரணத்தோடு உயிர்கள் முடிவடைகின்றன என்று போதிப்பது நிரீசுவரமதம். இதை நாஸ்திகம் என்றும் சொல்வர்.

மகனே! ஜாக்கிர உலகத்தைப் பார்க்கிற நீ சொப்பன உலகத்தைப் பார்க்கிறாய். சொப்பன உலகத்தைப் பார்க்கிற நீ உன்னை ஞானப்பிரகாச அகண்ட அருள் வெளியின் மைய உருவாகப் பார்க்கிறாய். முக்காலத்திலும் மூன்று அவஸ்தைகளிலும் இருக்கும் நின்னை இல்லை என்று சொல்லுவது நாஸ்திகமாகலாமே ஒழிய இருக்கிறவனாகிய உன்னைக் காட்டிக்கொடுப்பதை

நாஸ்திகமென்று சொல்லலாமா? மகனே! முடிவில் மீறுவதைக் கடவுளென்பர். முடிவாக மீறுவதைப் பார்க்கிறவனை நான் கடவுளென்கிறேன். முடிவில் மீறும் பொருளே முதலிலுமிருந்தது. முதலிலிருப்பதே மற்றெல்லாவற்றிற்கும் தாயும் தந்தையுமாகிறது. இம் முடிவான ஒப்பற்ற ஒன்றைப்பற்றி வாக்கு மாத்திரத்தால் பேசிக் காலத்தைக் கழிப்பதைக் காட்டிலும் இதைப் பிரத்யக்ஷமாகப் பார்த்து அனுபவிக்க அனுகூலங்களிருக்கிறபடியால், மகனே! நீயே அப்பரம் பொருளைப் பார்த்து எல்லாவித சந்தேகங்களினின்று விடுபடுவாயாக.

மகனே! ஆஸ்திகனுக்கும், நாஸ்திகனுக்கும் ஒரு காலத்தில் வாக்குவாதம் நேரிட்டது. ஆஸ்திகன் கடவுள் உண்டென்கிறான். நாஸ்திகன் இல்லை என்கிறான். உண்டென்கிறதை இல்லை என்கிறது சுலபமல்லவா? ஆஸ்திகன் கொண்டுவந்த ஆதாரங்களை யெல்லாம் நாஸ்திகன் ஆஸ்திகனுடைய சொற்களைக் கொண்டே சுலபமாகக் கண்டித்து விடுகிறான். இவ்விருவர்களுடைய வாய்கள் சலிக்கவே கைகள் கலக்கச் சண்டை செய்யலானார்கள். சண்டையில் இவ்விருவர்களும் மாண்டார்கள். இவ்விருவர் பக்கத்தும் சேர்ந்தவர்கள் பலர். இவர்கள் மாண்டவர்களைக் கண்டு விழிக்கலானார்கள். நாஸ்திகன் சாவது நியாயமே. ஆஸ்திகன் சாவது அநியாயமல்லவா? அரசசேவகர்கள் இவ்விருவர்களோடு சம்பந்தப்பட்டுள்ள ஆஸ்திகர்களையும், நாஸ்திகர்களையும் ராஜனிடம் கொண்டுபோனார்கள். அரசன் மிக்க அறிவாளி. அவர் சாக்ஷிகளை வெகு சிரத்தையோடு விசாரித்தார். அவரும் செவ்வையாக ஆலோசனை செய்தார். செத்தவர்கள் இருவரும் குற்றவாளிக

ளெனத் தெரிந்து கொண்டார். அவர்கள் சாவதற்கு அவர்களே காரணமென அறிந்தார்.

மகனே! அவ்வரசன் செய்துள்ள தீர்ப்பைப் பார். கடவுளைப்பற்றி வாதித்த ஆஸ்திகன் கடவுளைப் பார்த்திருந்தால் அக்கடவுள் தன்னிலும், நாஸ்திகனிலும் ஜீவாத்ம ரூபங்களாக இருக்கிறார் என்று நாஸ்திகனை மனத்தாலும்,வாக்காலும்,காயத்தாலும் புண்படுத்துவது தன்னைத் தானே புண்படுத்திக் கொள்வதாக ஆகிறதென்கிற அறிவால் நாஸ்திகனோடு வாக்குவாதத்திற்கே ஆரம்பித்திருக்கமாட்டான். நாஸ்திகன் கடவுள் இல்லை என்கிற கொள்கையில் வளர்க்கப் பட்டவனானாலும் தானிருந்தல்லவோ முன்னிலையா யிருக்கப்பட்ட ஆஸ்திகனோடு சண்டை செய்தான். தன்னை இவன் உள்ளபடி அறிந்திருந்தால், தானான ஆத்மாவே ஆஸ்திகனிலும் ஆத்ம ரூபியாக இருக்கப்பட்டவ னென்கிற அறிவால் தன்னோடு தானே சண்டை செய்திருக்க மாட்டான். ஆஸ்திகன் கடவுளைப் பிரத்தியுக்ஷமாகப் பாராத குற்றவாளி. நாஸ்திகன் ஆத்ம வஸ்துவைப் பிரத்தியக்ஷமாகப் பாராத குற்றவாளி. உள்ளதை உள்ளபடி அறியாத குற்றத்தால் இவ்விருவர்களும் தம்மையே தாம் மரண தண்டனைக் குட்படுத்திக் கொண்டு மாண்டார்கள்.

மகனே! தன்மை யின்றி முன்னிலை படர்க்கைகள் கிடையா. முடிவாக மீறப்பட்ட ஒப்பற்ற ஒருபொருளே முதலிலிருக்கப்பட்டது. முதலிலிருக்கப்பட்டதே மற்றெல்லாவற்றிற்கும் முதற்காரணம். முதற்காரணமான இவ்வாதிமூலப் பொருள் சங்கல்பமாத்திரத்தால் ஜீவ பாவத்தை அடைகையில் ஜெக ஜீவ பரங்களாகக் காணப்படுகிறார். இவ்வாறாகக் காணப்படும் ஜெக ஜீவ பரங்க

3

ளில் அம் முதற்பொருளே ஜீவான்மாக்களாகவும் அஜ் ஜீவான்மாக்களை அதனதன் இஷ்டப்படிச் சிருஷ்டித்துப் பாதுகாத்து வரும் பரமாத்மாவாகவும் இருக்கிறார்.

மகனே! ஜீவான்மாக்கள் பகிர் முகப்பட்டு உலகத்தில் விவகாரங்களை நடத்தும்போது அவரவர்களை அவரவர்களின் கருமங்களின்படி கடவுள் நடத்துகிறார். ஜீவான்மாக்கள் அந்தர் முகப்படும்போது கடவுள் தன் பரமாத்ம சொரூபத்தில் ஜீவான்மாக்களைத் தன்னோடு ஐக்கியப்படுத்திப் பேரானந்தத்தை அனுபவிக்கச் செய்கிறார். ஜீவான்மாக்கள் பரமான்மாவாகிய கடவுளோடு ஐக்கியமாகிப் பேரானந்தத்தை அனுபவிக்கும் விவகாரத்தை யோகமென்பர். கடவுள் தரிசனத்திற்காக முயற்சி செய்யும் பக்தனை அந்தர்முகப்படுத்தித் தன்னழகிய பரமாத்மதரிசனத்தைக் காட்டி, கண்ட இவனுக்குத் தான் பார்த்த பரவஸ்து அதாவது கடவுள் தானே என்கிற அறிவையும் கொடுத்து அவனைப் பகிர்முகப் படுத்தி உலக நிலையில் மற்றெல்லாரும் பூசித்து, உபசரிக்கும் அந்தஸ்தில் வைத்துப் பாதுகாக்கிறார். மகனே! நாஸ்திகம் என்கிறதே கிடையாது. எல்லாம் ஆஸ்திகம் தான். எல்லோரும் ஆஸ்திகர்களே. ஆனால் இரப்பவர்க் கில்லை என்பது நாஸ்திகம். உபகாரம் செய்யச் சக்தியுள்ளவன் விரும்பப்பட்டவர்களுக்குத் தான் அஸக்தனெனப் பொய் பேசுவது நாஸ்திகம். அதர்மிஷ்டன் எவனோ அவன் நாஸ்திகன். மகனே! அரூப அகண்ட அருள் வெளியாக இருக்கப்பட்டவரும் கடவுளே. நாம ரூப ஜக ஜீவ பரங்களாகக் காணப்படுகிறவரும் கடவுளே. நீ உன் ஆத்மரூபத்தைத் தரிசிக்கும்போது அவருடைய அகண்ட அருள் வெளி உன்

ஞானக் கண்ணுக்குக் காணப்படுகிறது. இது கடவு ளுடைய பரமான்ம சொரூபம். உலக நிலையில் ஜக ஜீவ பரங்களாக உன் தேகக் கண்களுக்கும், உன் மனக் கண்ணுக்கும் காணப்படுவது கடவுளுடைய சகுண ரூபம். எல்லாருக்கும் ஒரு பொருளைப் பற்றிய நினைவு ஒன்றே. அப்பொருளின் மனத்தோற்றமும் ஒன்றே. அந்நினைவு சொற்களாக வெளிப்படும் போது பேதப்படு கிறதானாலும், அவ்வெவ்வேறான சொற்களுக்கெல்லாம் உருவாயிருப்பது ஒரு பொருளே. ஒரு பொருளுக் குச் சொற்கள் பேதப்படுவது சிருஷ்டியினலங்காரம்.

மகனே! அகண்ட அருள் வெளியாகிய பரமாத்ம சொரூபம் மனதிற்குள்ளும் வெளியிலு மிருக்கிறது. அகண்ட அருள் வெளியாகிய பரமாத்ம சொரூபம் ஆகாயத்தினுள்ளும் புறமும் வியாபகமா யிருக்கிறது. அகண்ட அருள் வெளியாகிய பரமாத்ம சொரூபம் வாயுவினுள்ளும் புறமும் வியாபகமா யிருக்கிறது. அகண்ட அருள் வெளியாகிய பரமாத்ம சொரூபம் தேயுவினுள்ளும், புறமும் வியாபகமா யிருக்கிறது. அகண்ட அருள் வெளியாகிய பரமாத்ம சொரூபம் அப்பு வினுள்ளும் புறமும் வியாபகமா யிருக்கிறது. அகண்ட அருள் வெளியாகிய பரமான்ம சொரூபம் பிருதுவி யினுள்ளும், புறமும் வியாபகமா யிருக்கிறது. எங்கும் எல்லாவற்றினுள்ளும், புறமும் வியாபகமாயிருக்கப் பட்ட பரமாத்ம சொரூபம் உடல், உயிர் பெற்று வளரும் ஒவ்வோர் புல் பூண்டு செடி புழு பூச்சி பக்ஷி மச்சம் மிருகம் மனிதன் முதலிய ஜந்துக்களில் விசேஷாம் சமாகச் சேடித்து நின்று, அவ்வவ்வுயிரில் தன் சுபாவத் தொழில்களைச் செய்து கொண்டும் செய்வித்துக் கொண் டும் இருக்கிறது. ஒவ் வோர் ஜெந்துவில் விசேஷாம்

சமாகச் சேடித்து நிற்கும் பரமாத்ம பாகத்திற்கு ஜிவாத்மா வென்று பெயர். தேகத்தில் எந்த ஸ்தானத்தில் ஜீவான்மா வீற்றிருந்து வேலை செய்கிறதும், செய்வித்துக் கொண்டிருக்கிறதுமா யிருக்கிறதோ அந்த ஸ்தானத்திற்கு இதயம் என்று பெயர். மகனே! ஹிருதய ஸ்தானத்தில் ஜீவாத்ம ரூபமாக வீற்றிருக்கும் நீ வேலை செய்வதினின்றும், செய்விப்பதினின்றும் விடுபட்டு, உன்னை நீ பார்த்து நீ எந்த பரமாத்ம சொரூபத்தின் பாகமோ அந்தப் பரமாத்ம சொரூபத்தில் ஒற்றுமைப்பட்டுப் பேரானந்தானுபவ முக்தனுகப் பிரகாசிப்பாயாக.

சிஷ்யன் :—பகவானே! பேரானந்தம் எப்படியிருக்கும்?

குரு :—மகனே! இவ்வுலக வஸ்துக்களிலும், ஒவ்வோர் ஆண் பெண் சம்ஸர்க்கத்திலும் இருக்கப்பட்ட சுகமனைத்தையும் திரட்டி ஒன்ருகக் கூட்டினுல் எவ்வளவு சுகமோ அவ்வளவு சுகத்திற்கும் அதிகமாகவே யிருக்கிறது.

சிஷ்யன் :—ஓ பகவானே! பேரானந்தானுபவி எப்படி யிருப்பான்?

குரு:—மகனே! பேரானந்தானுபவி சாந்தசித்தனு யிருப்பான்.

சிஷ்யன் —ஓ குருநாதா! அடங்கின சக்தி மறுபடியும் வெளிப்பட்டு ஜெக ஜீவ பரங்களாக விளங்கமாட்டாதோ?

குரு :—மகனே! உனக்கிஷ்ட மிருந்து நீ நினைத்தால் அது வெளிப்பட்டுப் பழையபடி வேலைசெய்யும். உனக்கு உன் உடலும் காணப்படும். மற்றெல்லாவற்றையும் நீ பார்க்கலாம்.

சிஷ்யன் :—ஓ பகவானே! மாயாசக்தியை வசமாக்க ஓர் நினைவு மின்றி என்னைச் சும்மாயிருக்கச் சொன்னீர்களே. சொரூபம் சுயமாகப் பிரகாசிக்கும்வரையில் நான்

செயலற்று, நினைப்பற்று சும்மாவிருந்தால் என்னை உப சரிப்பவராார்? என் மனைவி மக்கள் தாய், தந்தையரைப் பாதுகாப்பாரார்? வேலை செய்து பிழைக்க மனமில்லாத சோம்பேறி என்றல்லவோ என்னை அவமதித்து விரட்டித் துறத்திடுவர்?

குரு:— மகனே! இதுவரையில் உன் கஷ்டத்தால் வளர்க்கப் பட்ட இவர்களுக்கும் அறிவு உண்டு. இக்காலங் களில் இவர்கள் உன்னை அன்புடன் ஆதரித் துப சரிப்பது இவர்களுடைய கடமையும் விசேஷ புண்ணிய காரியமுமாகின்றது. புண்ணிய பலனை விரும்பாதவர் எவரேனு முண்டோ? உன்னை அவமதித்து விரட்டித் துறத்திவிட்டால் எவ்விதத்திலும் நஷ்டம் அவர்க ளுக்கே அல்லது உனக்கில்லை. பரிபூரண அகண்ட உன் ஆத்ம சொரூபத்தில் அனைத்துலகங்களும், அனைத்துயிர் களும் இருக்க உன் மனைவி மக்கள் தாய் தந்தையர்க ளும் உன்னிலிருக்காமல் எங்கே போய் விடுவார்கள். நீ இவ்விஷயத்தில் கவலைப் படுவானேன்? சிறிய ஜீவ நிலையை அகண்ட கடவுள் நிலைக்கு உயர்த்துவதற்கான அனுகூலம் வாய்க்கப்பட்ட காலத்து ஒருவன் இதைப் பற்றித் தானு பின்னடைவன்? மேலும், என்னை அடைந்த நீ புண்ணியசாலியாகவே இருத்தல் வேண் டும். இந்த அத்வைத பரஞானத்தை அறியத் தக்க அறிவில் வளர்ந்துள்ள நீ தரும மார்க்கத்தில் வளர்ந் தவனுகவே யிருத்தல்வேண்டும். தரும மார்க்கத்தில் வளர்ந்தவனுக்கு அவன் செய்துள்ள தருமம் பிராரப்த வினையாக அமைந்துள்ளது. இப்பிராரப்தம் உன்னையும் ஊட்டி வளர்க்கும். உன்னைச் சார்ந்துள்ளவர்களையும் காப்பாற்றும். மகனே! நீ பயப்படவேண்டாம். இத் துடன் என்னுடைய அநுக்கிரகமும் உனக்குள்ளது.

என்னுடைய அநுக்கிரகமே கடவுளருள். நீ இது காறும் கடவுளை நம்பிச் செய்துள்ள நிஷ்காமகருமம், பக்தி யின்பலனாக கடவுளே குருவுருவெடுத்துத் தடுத்தாட் கொள்ளத் திருவுள்ளச் சம்மதப்பட்டெழுந்தருளியுள் ளார். என் சொற்படி நீ நிஷ்டையிலமர்ந்து ஆன்ம பர மான்ம தரிசனம் பெற்று உலக நிலைக்குத் திரும்பி ஆத்ம அறிவில் நிலைத்திருந்து ஜீவன் முக்தனாகப் பிரகாசிப்பாயாக. உனது எத்தொழிலிலுமே அகங் கார மமகாரங்கள் சிறிதுமின்றி சர்வ ஜீவ தயாபர மூர்த்தியாக விளங்குவாயாக. உன்னை ஆச்சிர யிக்கும் பக்தர்களை முக்தர்களாக்கும் இயல்புடன் வீற்றிருப்பாயாக. நீ மற்றெல்லாராலும் பிரிய முடன் பூசித்துபசரிக்கப்படும் பேசும் தெய்வமாகப் பிரகாசிப்பாயாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஓம் ஸ்ரீ சத்குரு அருணாசல ரமண பரமாத்மார்ப்பண மஸ்து

ஸ்ரீ பகவத் கீதை

இது வேதங்களுக்குத் தேவ பாஷ்யமாயும், வேத வேதாந்தங்களின் சாரமாகவும் இருக்கிறபடியால் புத்தகங்களிலெல்லாம் மேலான புஸ்தகமென்பதில் சந்தேகமில்லை.

எத்தேசத்தவராயினும், எந்த மதஸ்தவராயினும் எவ்வளவு எழுதினாலும், எவ்வளவு பேசினாலும் அவை யனைத்தும் கீதையிலிருக்கப்பட்ட சில சொற்களின் விரிவுரை என்றே சொல்லலாம்.

குடும்பஸ்தரும், ராஜாதி ராஜரும், தேவாதி தேவருமான ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியா லருளப்பட்டதாகையால் கீதையானது ஸ்திரீகளுக்கும், புருஷர்களுக்கும், ராஜாக்களுக்கும் இல்லறத்தவர்களுக்கும், துறவிகளுக்கும் பயன்பட்டு வரும் நூலாக இருக்கின்றது.

எல்லாரும் கஷ்ட நஷ்டமின்றி சுகஜீவனம் செய்துகொண்டே மோக்ஷ சாதனங்களான கருமயோகம், பக்தியோகம், ராஜயோகம், தியானயோகம், ஞானயோகாதிகளைப் பழகும் உபாயங்களைக் கற்பித்துக்கொண்டிருப்பது.

வாசிக்கிறவர்களைச் சோம்பலினின்றும், அறியாமையினின்றும் விடுவித்து, சுறு சுறுப்புள்ள தைரியசாலிகளாகவும், வாசாலகர்களாகவும், ஞானவான்களாகவும், ஜீவகாருண்யமும் அன்பும் நிறைந்த பரோபகாரர்களாகவும் செய்துகொண்டிருப்பது.

ஹிந்துக்களுடைய பெருமைகளை எங்கும் பிரகாசிக்கச் செய்வதுமல்லாமல் இவர்களை மற்றெல்லாருக்கும் ஆரியர்களாக வைத்துப் பாதுகாத்து வருவது.

வேறுபடும் சமயங்களில் ஒற்றுமையைக் காட்டி சமரசத்தை ஊட்டி, சமயவாதிகளுடைய சண்டை சச்சரவுகளை நீக்கும் குணமுடையது.

எல்லாவித மகிமைகளுக்கும் இருப்பிடமாயுள்ள இக்கீதா சாஸ்திரம் இவ்வுலகத்திய எல்லா பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு லக்ஷாதி லக்ஷம் புஸ்தகங்களாக எல்லா ஜாதி ஜனங்களில் உலவிக்கொண்டிருக்கிறது.

தமிழ் படிக்கும் ஆணும் பெண்ணும், சிறியோர்களும் பெரியோர்களும் இக்கீதா சாஸ்திரத்தைப் படித்தறியுமாறு மிகச் சுலபமான தமிழ் வசன நடையில் மொழிபெயர்த்து ஸ்ரீ பகவத் கீதார்த்த பாலபோதினி என்கிற பெயரால் அச்சிடலானேன்.

இப்புஸ்தகத்தின் கடைசியில் இந்தியாவின் மகிமையைப் பற்றியும் ஹிந்துக்களின் பெருமையைப் பற்றியும் எழுதியிருப்பதோடு கடவுள், குரு, ஆன்மா, பரமான்மா, ஜீவான்மா, முத்தி,

துவிதம், விசிஷ்டாத்துவிதம், அத்துவிதம், சாங்கியம், கருமம், ஆசை, பக்தி, அன்பு, ஆசிரியம் யோகம், தியானம், நிஷ்டை, நிர்விகல்பசமாதி, அஞ்ஞானம், ஞானம், க்ஷேத்திரம், க்ஷேத்திரஜ்ஞன், புருஷன், பிரக்ருதி, ஆண் பெண், மாயை, யோக மாயை, நல்லது, சமரசம், மதம், ஜாதி தத்துவமசி கீதா முதலிய வார்த்தைகளின் ரகசியார்த்தங்களை அனுபவஞானத்தை அனுசரித்து "அரும்பதப் பொருள் விளக்கம்" என்கிற தலைப்பின் கீழ் எழுதியுள்ளேன்.

இக்கீதா புத்தகங்களை எல்லோரும் வாங்கி வாசிப்பார்களாக.

மரணத்தின் ரகசியம்.

இவ்வுலகில் எல்லா ஜீவ ஜந்துக்களுக்கும் மரண பயமுண்டென்பதை எல்லாருமறிவர். செத்த பிறகு தம் கதி யாதாமோ என்கிற கவலை கொள்ளாதவர் ஆணிலும் பெண்ணிலும் எவருமே இருக்கமாட்டார். ஒவ்வொருவருக்கும் இக்கவலை உண்டு.

மரணத்தின் ரகசியத்தை ஒருவாறு தெரியப்படுத்த இப்புத்தகத்திலிருக்கப்பட்ட விஷயங்கள் போதுமானவை என்று நினைக்கிறேன். இப்புத்தகத்தில் நாசிகேதுவுக்கும் எமதருமராஜனுக்கும் நடந்த சம்வாதமும், ஜனக மகாராஜருக்கும் யாஜ்ஞவல்கிய மகரிஷிகளுக்கும் நடந்த சம்பாஷணைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆன்ம தரிசனம்

எது கடவுளென்று பொதுவாகச் சொல்லப்படுகிறதோ, எதை வைஷ்ணவர்கள் விஷ்ணுவென்றும், சைவர்கள் சிவமென்றும், வேதாந்திகள் பிரமனென்றும் பரமாத்மனென்றும், மகம்மதியர்கள் அல்லாவென்றும், கிறிஸ்தவர்கள் பரமண்டலத்தி லிருக்கப்பட்ட பிதா வென்றும் பெயரிட்டழைக்கிறார்களோ அக்கடவுள் உடலுயிர் பெற்று வளரும் ஒவ்வோர் ஜீவனின் உள்ளத்தில் ஆத்மரூபியாக குடியிருக்கிறார் என்று மகான்கள் திருவாய்மலர்கின்றனர்.

ஆத்ம தரிசனம் என்கிற இப்புத்தகம் தம்மிலிருக்கப்பட்ட ஆத்மரூபியான கடவுளைத் தரிசிக்க முயலும் பக்தர்களுக்கு உதவி புரியும் நண்பனாயிருக்குமென்று நினைக்கிறேன்.

S. நாராயண ரெட்டி,

சின்னகடை வீதி, திருவண்ணாமலை.

கீழ்க்கண்ட விலாசதாரரிடம் கிடைக்கக்கூடிய

புஸ்தகங்கள்.

		ரூ.	அ.	பை.
கடவுளறிவு	...	0	4	0
ஆன்ம தரிசனம்	...	0	3	0
பகவத் கீதார்த்த பாலபோதினி	...	0	8	0
மாணத்தின் ரகசியம்	...	0	4	0
திருவண்ணுமலை ஸ்ரீ ரமண மகரிஷிகளுடைய சரித்திரமும் உபதேசங்களும்	...	0	6	0

S. நாராயண ரெட்டி,

சின்னகடை வீதி,

திருவண்ணுமலை.